**தலைப்பு 293 – இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஒக்தோபர் 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) இந்த அறிக்கையின் பந்தி இலக்கம் 3.3 இன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் தொடர்பில் கடந்த வருடத்தில் என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவின விடயங்கள் 02 இற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 23,100,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகளில், ரூபா 13,320,000 பயன்புடுத்தப்பட்டிருக்கவிலலை. அதற்கமைய ஆண்டின் இறுதியில் உள்ளபடியான அந்த செலவின விடயங்களின் சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டின் 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான கருத்திற்கொள்ளக்கூடிய அளவில் காணப்பட்டது. | 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் மாத வாகன பட்டியல்களுக்காக அந்த ஆண்டின் இறுதியில் செலுத்துவதற்கு முன்வைக்கப்பட்ட காரணத்தால் மற்றும் 2021 ஆம் ஆண்டின் அரச செலவினங்களை மீளாய்வு செய்தலின் கீழ் செலவினங்களை கட்டுப்படுத்த நேர்ந்தமையால் ஏற்பட்ட சேமிப்பாகும். | வழங்கப்பட்டுள்ள பிரகாரம் நிதி ஏற்பாடுகளை முழுமையாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் 04 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 15,000,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகளில், ரூபா 7,263,677 கூட்டுத்தொகை பயன்புடுத்தப்பட்டிருக்கவிலலை. அதற்கமைய அந்த செலவின விடயங்களின் சேமிப்பானது தேறிய நிதியேற்பாட்டின் 30 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான கருத்திற்கொள்ளக்கூடிய அளவில் காணப்பட்டது. | அரசாங்கத்தின் இறக்குமதிக் கட்டுப்பாட்டின் காரணமாக, அலுவலக இயந்திரங்கள் மற்றும் இயந்திரங்களைப் பராமரித்தல் மற்றும் பழுதுபார்ப்பதற்கான உதிரி பாகங்களை வாங்குவதில் உள்ள சிரமம் மற்றும் கொரோனா தொற்று நிலைமை காரணமாக தேவையான சில பழுதுபார்ப்புகளை மேற்கொள்ள இயலாமை ஆகியவை இந்த நிதியேற்பாட்டினை சேமிக்க வழிவகுத்தன. | வழங்கப்பட்டுள்ள பிரகாரம் நிதி ஏற்பாடுகளை முழுமையாக பயன்படுத்துதல் வேண்டும். |

## 2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம், மேற்கொள்ளப்பட்ட பொறுப்புகள் மற்றும் செலவினத்தின் அளவானது எந்தவொரு சந்தர்ப்பத்திலும், ஆண்டிற்கான நிதியேற்பாட்டினை விஞ்சக்கூடாத போதிலும், 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது அபிவிருத்தி உதவியாளர்களுக்கான செலவின விடயத்தின் கீழான நிதியேற்பாட்டின் சேமிப்பு ரூபா 3,192,086 ஆன போதிலும், பொறுப்புகளின பெறுமதி ரூபா 45,622,099 ஆனமையால் சேமிப்பினை விஞ்சிய பொறுப்புகளின பெறுமதி ரூபா 42,430,013 ஆகும். | நி.பி. 94(2) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதியேற்பாட்டினை விஞ்சி கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படவில்லை . எனினும், பொறுப்புகளின் சேமிப்பு எல்லையினை விஞ்சி செயற்படாதிருக்க உரிய உத்தியயோகத்தர்களுக்கு அறிவுரை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. | நிதியேற்பாட்டினை விஞ்சி கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படக்கூடாது. |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | அவதானிப்புகள் பெறுமதி | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டிச் சுற்றறிக்கையின் 7.6 ஆம் பந்தி | 3,519,253 | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் குறுக்குப் பதிவுகள் மூலம் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், குறுக்குப் பதிவுகள் மூலம் பெறுவனவுகள் ரூபா 3,519,253 மற்றும் குறுக்குப் பதிவுகள் மூலம் கொடுப்பனவுகள் ரூபா 3,519,253 உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் படி, நாணயம் அல்லாத முன்பணங்கள் (மாறற்றல் பத்திரங்கள் மூலம்) ரசீதுகள் மற்றும் கொடுப்பனவுகளாக பதிவு செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, எனவே குறிப்பு எதிர்காலத்தில் சேர்க்கப்படும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். | சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கமைய செயற்பட வேண்டும். |

3. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்கான இறப்பர் தகவல் முகாமைத்துவ கட்டமைப்பு மென்பொருளை அபிவிருத்தி செய்வதற்காக, ரூபா 2,000,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த பணியை நிறைவேற்ற முடியாதிருந்தது. | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகத்தின் (ICTA) வழிகாட்டுதலின் கீழ் செயற்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ், இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்கான இறப்பர் தகவல் முகாமைத்துவ முறைமை மென்பொருளை அபிவிருத்தி செய்வதற்காக, சம்பந்தப்பட்ட பங்களிப்பை நிறைவேற்றுவதற்காக பெறுகை கையளிக்கப்பட்ட நிறுவனம் அந்த செயற்திட்டத்திலிருந்து விலகுதல், மென்பொருள் அபிவிருத்திக்க பொருத்தமான நிறுவனமொன்றை தெரிவு செய்து மென்பொருளை அபிவிருத்தி செய்தல் அல்லது பணம் செலுத்துவதற்கு அந்த வருடத்தில் இயலுமை காணப்படவில்லை. | திட்டமிட்ட பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், செயன்முன்னேற்றம் பெற்றராத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கூட்டெரு தயாரிப்பதற்காக 42 பல்நோக்கு துண்டாக்கும் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு திணைக்களம் ரூபா 15,210,090 தொகை அரச தொழிற்சாலைக்கு வழங்கியுள்ள போதிலும், 2022 மே மாதத்தில் 08 இயந்திரங்களும், ஆகஸ்ட் மாதத்தில் 06 இயந்திரங்களுமாக 14 இயந்திரங்கள் கிடைத்திருந்தன. அதற்கமைய 2022 செப்தம்பர் மாதமளவில் பணம் செலுத்தி 09 மாதங்கள் கடந்திருந்த போதிலும், எஞ்சிய 28 இயந்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த தாமதத்தின் காரணமாக குறித்த கூட்டெரு செயற்திட்டத்தை உரிய முறையில் மேற்கொள்ள முடியாதிருந்தது. | குறித்த இயந்திரங்களை இறக்குமதி செய்வதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தினால் விநியோகம் தாமதமடைவதாக அரச தொழிற்சாலை தெரிவித்துள்ளது. | திட்டமிட்ட பணிப்பொறுப்பை சரியாக நிறைவேற்ற வேண்டும். |

## 3.3 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அழிவு நட்டம் ஏற்பட்டு 03 முதல் 07 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்துள்ள 09 சம்பவங்கள் தொடர்பில் ரூபா 3,159,640 கூட்டுத்தொகையான நட்டங்கள் மற்றும் அழிவுகளை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 03 முதல் 07 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்துள்ள 09 சம்பவங்கள் தொடர்பில் ரூபா 3,159,640 கூட்டுத்தொகையான நட்டங்கள் மற்றும் அழிவு தொடர்பில் பணிகள் நிறைவு செய்யப்படவில்லை என்பதுடன், பல வாகனங்களுக்கான சட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதும் காரணமாக அமைந்துள்ளது. | வாகனங்களுக்கு ஏற்படும் நஷ்டத்தை வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். |

## 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்கு கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2009 ஆம் ஆண்டின் போது 75 பேர்ச் பரப்பளவான காணி ரூபா 66,700,000 தொகைக்கு கொள்வனவு செய்ய நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 59,304,347 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த காணியில் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு மற்றும் திட்டங்களை தயாரிப்பதற்கு கட்டிடங்கள் திணைக்களத்திற்கு ரூபா 150,000 தொகை 2009 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 249 மில்லியனான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த ஆரம்ப பணிகள் நிறைவு செய்யப்பட்டு 11 வருட காலம் கடந்திருந்த போதிலும், நிலுவைப் பணத்தை செலுத்தி காணியை கையகப்படுத்தும் பணிகள் மற்றும் காணியின் நிர்மாணப் பணிகள் இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்டிராததுடன், 2017 பெப்ரவரி மாதம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் திணைக்களம் வாடகைக்கு எடுத்த தனியார் கட்டிடமொன்றில் நடாத்தப்படுகின்றது. | நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட காணியை முறைப்படி கையகப்படுத்த 2019 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அதன்படி, 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி, நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் பிரதேச செயலாளரிடம் காணியை ஒப்படைக்குமாறு பணித்துள்ளதுடன், பிரதேச செயலாளரினால், நில அளவைத் திணைக்களம் ஆய்வு செய்து அளவீடு செய்யுமாறு பணித்துள்ளார். நிலத்தை அளவீடு செய்து ஒப்படைத்த பின்னர் கட்டிடம் கட்டும் பணியை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். | க்ணிகளை கையகப்படுத்துதல் மற்றும் கட்டடம் கட்டும் பணியை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும். |

**3.5 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தினால் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்கு மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு உரிய இரத்தினபுரி, கேகாலை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் அமைந்துள்ள 152 ஏக்கர் பரப்பளவாக 04 நாற்று மேடைகள் பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன், இந்த காணிகளை திணைக்களத்திற்கு கையகப்படுத்த கணக்காய்வுத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த காணிகளை கையகப்படுத்த இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினால் உரிய நிறுவனங்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | காணிகளை கையகப்படுத்தும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | இறப்பர் மீள் நடுகை மற்றும் புதிய நடுகை நிவாரண முறைமையின் கீழ் 10 மாவட்டங்களில் இறப்பர் பயிர்ச்செய்கைக்கான நிவாரணங்களை பெற்ற 31,143 பயிர்ச்செய்கையாளர்களின் 3,135 பயிர்ச்செய்கையாளர்கள் இறப்பர் பயிர்ச்செய்கையை கைவிட்டமையால் வழங்கிய நிவாரணத் தொகையில் ரூபா 116,551,556 தொகை அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. | நிவாரணங்களை பெற்று பால் வெட்டும் மட்டத்தினை அடைவதற்கு முன்னர் தோல்வியடைந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ள காணிகளுக்காக அந்த காணி உரிமையாளர்களிடம் அவர்களுக்கு செலுத்திய நிவாரணங்களை மீள அறவிட வேண்டும். இது தொடர்பில் விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நிவாரணத் தொகையை மீள செலுத்துவதை புறக்கணிக்கும் நபர்களுக்கு எதிராக சட்டரீதியதன நடவடிக்கை எடுக்கும் அதிகாரமானது இறப்பர் ஆலோசனைச் சபைக்கே உள்ளது. இந்த ஆலோசனைச் சபை 2009 ஆம் ஆண்டு முதல் செயலிழந்து காணப்படுகின்றது. இந்த | இறப்பர் பயிர்ச்செய்கை மானியத்தை பெற்று கைவிட்ட விவசாயிகளிடம் அறவிட வேண்டிய தொகையை தாமதமின்றி வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இறப்பர் ஆலோசனைச் சபையை தாபிக்குமாறு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிற்க கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதுவரையிலும் இறப்பர் ஆலோசனைச் சபை தாபிக்கப்படவில்லை. | |
| (இ) | திணைக்களத்திற்குச் சொந்தமான 315 ஏக்கர்கள் நிலப்பரப்பில் 08 நாற்று மேடைகளுக்காக 224 ஏக்கர்கள் பரப்பளவான காணி மற்றும் முன்மாதிரி இறப்பர் பயிர்ச்செய்கைக்காக 19 ஏக்கர்கள் பரப்பளவான காணி பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய நிலப்பரப்பில் சுமார் 72 ஏக்கர்கள் பரப்பளவான நாற்று மேடைக்காக அல்லது முன்மாதிரி இறப்பர் பயிர்ச்செய்கைக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | செயல் திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள வருடாந்த முடிக்கப்பட்ட நாற்றுகளின் இலக்கின் அடிப்படையில், வருடாந்தம் அரசின் 08 இறப்பர் நாற்று மேடைகளுக்கு வழங்கப்படும் முடிவு நாற்றுகளின்இலக்கை உற்பத்தி செய்வதற்கு தேவையான நிலப்பரப்பு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், எஞ்சிய பயன்படுத்தப்படாத நிலத்தை சுத்தம் செய்ய இயந்திரங்கள் மற்றும் தொழிலாளர்களைப் பயன்படுத்துவதற்கான பெரும் செலவு காரணமாக, கடுமையான தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டமை மற்றும் கோவிட் சூழ்நிலை காரணமாக, நாற்றுமேடையில் வேலையாட்களின் வருகையும் மிகவும் குறைவாகவே காணப்பட்டதுடன், இந்த நிலம் கன்றுகளை உற்பத்தி செய்ய மட்டுமே பயன்படுத்தப்பட்டது. | பயன்படுத்தப்படாது உள்ள 72 ஏக்கரை ஆக்கபூர்வமான பணிகளுக்கு பயன்படுத்த வேண்டும். |
| (ஈ) | திணைக்கத்திற்குச் சொந்தமான 03 லொறிகள் மற்றும் கெப் வண்டியொன்று ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட முடியாது 04 முதல் 09 வருடங்கள் வரையான காலமாக காணப்பட்டதுடன், இந்த வாகனங்களை கைத்தவிர்ப்பதற்கு | 2020 ஆம் ஆண்டு முதல் நாட்டில் ஏற்பட்ட கோவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக, அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வது கடினமாக இருந்தது. | வாகன பழுதுபார்த்தல்கள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பாய்வுச் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த வாகனங்களை கைத்தவிர்ப்பதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | 53-9302 ஆம் இலக்க கெப் வண்டி 2018 திசெம்பர் மாதத்தின் போது விபத்திற்கு உள்ளாகியுள்ளதுடன், பழுதுபார்த்தல் ஆக்கபூர்வமானது அல்ல என்பது 2019 சனவரி மாதத்தின் போது மோட்டார் வாகனப் பரிசோதனையின் போது மோர்டார் வாகனப் பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2021 சனவரி மாதத்தின் போது ரூபா 729,100 தொகை பழுதுபார்த்தலுக்காக கராஜிற்கு வழங்கி அந்தபழுதுபார்த்தல் பணிகள் இதுவரை நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கோவிட் தொற்றுநோய் காரணமாக, வாகனத்தை திருத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், 06 மாதங்களுக்குள் பழுதுபார்ப்புகளை மேற்கொள்ளுமாறும் கராஜுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | மோட்டார் வாகன பரீட்சகரின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | திணைக்களத்திற்கு இதுவரையிலும் வேறு அமைச்சுகளிலிருந்து கிடைத்த 03 வாகனங்கள் மற்றும் இலங்கை வங்கியின் நிதிக் குத்தகை முறைமையின் கீழ் வாகனமொன்றை நிறுவனத்தின் பெயரில் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கையகப்படுத்தல் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது என தெரிவித்துக் கொள்கிறேன். | திணைக்களத்திற்கு கிடைத்த வாகனங்களை கையகப்படுத்தல் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 484 ஆக இருந்ததுடன், அதில் 102 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. அந்த வெற்றிடங்களுக்கு இடையே சிரேஷ்ட மட்டத்திலான 14 வெற்றிடங்களின் கீழ் இலங்கை நிர்வாகச் சேவையின் 02 பணிப்பாளர் பதவிகள், 04 உதவிப் பணிப்பாளர் பதவிகள் மற்றும் கணக்காளர் சேவையின் 03 பதவிகளுக்காக 2020 ஆம் ஆண்டு முதல் உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தில் உயர் மட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் வெற்றிடங்களை நிரப்புவது அரசசேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரால் மேற்கொள்ளப்படுவதால், இந்த வெற்றிடங்கள் குறித்து அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | இந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் போது 19 இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள எழுத்துமூலப் பரிசோதனையொன்றை நடாத்தி 2021 யூன் மாதத்தின் போது நியமனங்கள் வழங்கும் போது 13 பேர் அந்த நியமனங்களை கையேற்றிருக்கவில்லை. 2021 ஆகஸ்ட் மாதத்தின் போது பெருந்தோட்ட அமைச்சினால் மீண்டும் 55 இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன், திணைக்களத்தினால் 2021 செப்தம்பர் மாதத்தில் | இரப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் இந்த பரீட்சையை நடாத்திய போதிலும், பெறுபேறுகள் நிறுவனத்தினால் வெளியிடப்படாத நிலையில், பெறுபேறுகள் வெளியானதன் பின்னர் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள உரிய பணிகள் இடம்பெற்று வருகின்றன. | இந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |

இணைத்துக்கொள்வதற்கு பத்திரிக்கை அறிவித்தலொன்று வெளியிடப்பட்டிருந்தது. அதற்காக 281 விண்ணப்பதாரிகள் திசெம்பர் மாதத்தில் எழுத்துமூல பரீட்சைக்கு தோற்றியிருந்ததுடன், இதுவரையிலும் எவரும் இணைத்துக் கொள்ளப்படவில்லை.